முடிவெடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியை ஆராய்ந்து, தேவை இருப்பின் செய்து தருவேன் என்று கூறி இருக்கின்றார்கள். கண்டிப்பாக தேவை இருக்கும் என்பதை வலியுறுத்தி, நிச்சயமாக அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

169—

மேம்பாலம்

*__4805—திரு. டி. சுரேஷ்குமார்:__

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, நாராயணகுப்பம் முதல் மலைமஞ்சனூர் வரை மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, பென்னர்—போந்தை சாலை கிலோ மீட்டர் 4/0—ல் நாராயணகுப்பம்—மலைமஞ்சனூர் செல்ல பாம்பாறு குறுக்கே 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், ஏற்கெனவே இருந்த தரைப் பாலத்திற்கு மாற்றாக

2013 ஏப்ரல் 8]

உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு 18—7—2012 அன்று பணி துவக்கப்பட்டு, 12—12—2012 அன்று உரிய காலத்தில் பணிகள் முடிக்கப்பெற்று மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் காணொலிக்காட்சிமூலம் பல்வேறு மாவட்டங்களில் கட்டிமுடிக்கப்பட்ட பாலங்களைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிய பாம்பாற்றின் குறுக்கே கட்டி முடிக்கப்பட்ட பாலமும் மக்களின் பயன்பாட்டிற்குத் திறந்துவைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், மார்த்தாண்டம், குளச்சல் போன்ற பகுதிகள் மிக முக்கியமான நகரங்கள். அங்கே பல்வேறு மருத்துவமனைகள், கல்லூரிகள் இயங்கிவரும் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள். மார்த்தாண்டத்திலிருந்து குளச்சல் போகும் சாலையில் விரிகோடு பகுதியில் ஒரு இரயில்வே கிராஸிங் இருக்கிறது. தினம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் அங்கே சென்றுகொண்டிருப்பதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சரியான நேரத்திலே போகமுடியாத அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அவல நிலையைப் போக்குவதற்கு அந்தப் பகுதியில் ஒரு மேம்பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் 2011—2012—ல் 23 பாலங்களும், 2012—2013—ல் 14

பாலங்களும், 2013–2014–ல் 18 பாலங்களும், ஆக 55 இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்களை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் அந்த மேம்பாலப் பணிகளை எல்லாம் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்ட பகுதியை ஆய்வு செய்யவேண்டும். ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், ஒரு இலட்சம் இரயில்வே அலகுகள் அந்த இரயில்வே கடவைக் கடக்க வேண்டும் என்று நான் ஏற்கெனவே இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கின்றேன். அப்படி இருந்தால்தான் மத்திய இரயில்வே அமைச்சகம் ஒப்புதல் வழங்கும். ஆகவே, அவ்வாறு ஒரு இலட்சம் அலகுகள் அந்த இரயில்வே கடவினைக் கடப்பது ஆய்விலே கண்டறியப்பட்டால் அந்தப் பகுதியில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வரும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தெற்குவாசல் இரயில்வே மேம்பாலம் மிகவும் குறுகலான பாலமாக உள்ளது. இதனால் போக்குவரத்து நெருக்கடியினால் மிகப்பெரும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, அங்கு அடுக்கு மேம்பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியினை ஆய்வு செய்து, அங்கே நான் குறிப்பிட்டவாறு ஒரு இலட்சம் இரயில்வே அலகுகள் அந்தக் கடவினை கடக்கின்றபட்சத்தில் அங்கே பாலம் கட்டுவதற்கு அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட குடியிருப்பு நெரிசலைப் போக்குவதற்கு தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மதுரை, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, திருப்புவனம் சட்டமன்றத் தொகுதிகளில் துணைக்கோள் நகரம் ரூ.120 கோடியிலே அறிவித்ததற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் நகரத்தின் மையத்தில் இருக்கக்கூடிய, பழைய விமானநிலையத்திற்குச் செல்லுகின்ற சாலையில் இரயில்வே கிராசிங்கினால் பல இன்னல்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது. அங்குள்ள நகரத்திற்கும், அதைக் கடந்து செல்கின்ற 25 கிராம மக்களுக்கும், கல்லூரி, மருத்துவமனை, பள்ளிகளுக்குச் செல்வது மிகவும் சிரமமாக இருக்கின்ற காரணத்தால், திருமங்கலத்தின் மையத்தில் உள்ள இரயில்வே கிராசிங்கைக் கடப்பதற்கு அங்கே உடனடியாக ஒரு உயர்மட்டப் பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமங்கலத்தின் மையப் பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கின்றோம். ஆனால், மத்திய அரசாங்கத்தின் இரயில்வே அமைச்சகத்தால் அது நிராகரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுகூட 32 இரயில்வே மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலம் கட்டவேண்டுமென்று அனுப்பி வைத்தோம். ஆனால், 18 இரயில்வே பாலங்கள் கட்டுவதற்குத்தான் அனுமதி தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளை எல்லாம் நாங்கள் பரிசீலித்து மத்திய இரயில்வே அமைச்சகத்திற்கு

அனுப்பிவைத்தாலும்கூட, அவர்கள் குறிப்பிட்ட வரைமுறை வைத்திருக்கிறார்கள், ஒரு இலட்சம் இரயில்வே அலகுகள் அந்த இரயில்வே கடவினை கடந்தால்தான் அதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு, அவர்கள் குறிப்பிடுகின்ற வரைமுறை இருந்தால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

170—

தடுப்பணை சீரமைத்தல்

3718*—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், செட்டிகுளம் ஊராட்சி, அனுமன் நதியிலுள்ள தடுப்பணையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராசிபுரம் வட்டம், செட்டிகுளம் ஊராட்சியிலே அனுமன் நதியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை பழுதாகியுள்ளது சரிசெய்யப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். மக்கள் எண்ணுகின்றதை, எண்ணுகின்றபோதே செய்து முடிக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) செட்டிகுளம் ஊராட்சி, ஸ்ரீரெங்கநாராயணபுரம் அருகில் அனுமன் நதியின் குறுக்கே